தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை 1.3.2025 அன்று முகாம் அலுவலகத்தில் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைத் தலைவர் மு. அப்பாவு அவர்கள் சந்தித்து பிறந்தநாள் வாழ்த்து தெரிவித்தார்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடம் கல்லூரியில் சேர்வதற்கு மனு அளித்து தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உத்தரவின் பேரில் அரசு கல்லூரியில் சேர்ந்து கல்லூரி படிப்பை முடித்து தற்போது மதுரை தொழிலாளர் நலத்துறையின் அலுவலகத்தில் பணி புரியும் செல்வி சோபனா அவர்களுக்கு மதுரை பூங்கா முருகன் கோவிலில் திருமணம் நடைபெற்றது. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் செல்வி சோபனா அவர்களுக்கு திருமணம் வாழ்த்து செய்தி அனுப்பி வைத்தார். வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் பி.மூர்த்தி திருமணத்தில் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தி தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கிய திருமண வாழ்த்துச் செய்தியை மணமக்களுக்கு வழங்கி வாழ்த்து தெரிவித்தார்.

கழகத் தலைவர் – தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்த தினத்தை முன்னிட்டு மதுரை உயர் நீதிமன்றத்தில் மூத்த வழக்கறிஞர்கள் இளம் வழக்கறிஞர்களுக்கு சட்டப் புத்தகத்தை வழங்கினார்கள். இவ்விழாவில் உயர் நீதிமன்ற, வழக்கறிஞர் கள் வீரா கதிரவன்,பாஸ்கரன்,அஜ்மல் கான்,திலக்குமார், ஆர்.எம் அன்புநிதி, லிங்கதுரை, காந்தி ராஜன், சரவணன்,செல்வக ணேஷ், சாரங்கன், ராகவேந்திரன் மற்றும் திரளான வழக்கறிஞர்கள் கலந்து கொண்டனர்.

2024 - 25 ஆம் கல்வியாண்டிற்கான பொதுத் தேர்வு எழுதவுள்ள

மாணவர்கள் - தேர்வர்கள் தங்களது ஐயங்களை தீர்க்க தேர்வுக் கட்டுப்பாட்டு அறைக்கு தொடர்பு கொள்ளலாம்!

அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அறிவிப்பு!

சென்னை, மார்ச் 3-

2024-25-ஆம் கல்வி யாண்டிற்கான பொதுத் தேர்வு எழுதவுள்ள 12-ஆம் வகுப்பு பொதுத்தேர்வினை 8,21,057 தேர்வர்களும், 11-ஆம் வகுப்பு பொதுத்தேர் வினை 8,23,261 தேர்வர்க ளும், மற்றும் 10 ஆம் வகுப்பு பொதுத்தேர்வினை 9,13,036 தேர்வர்களும் தேர் வெழுதவுள்ளனர். மாண வர்கள்/தேர்வர்கள்/பொது மக்கள் தங்களது புகார்கள், கருத்துக்கள் மற்றும் ஐயங் களை தேர்வுக் கட்டுப் பாட்டு அறை - தொடர்பு எண்கள் 9498383075 / 9498383076 தெரிவித்து பயன்பெறுமாறு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யா மொழி கேட்டுக்கொண் டுள்ளார்.

2024-25-ஆம் கல்வி யாண்டிற்கான மார்ச்/ஏப் ரல் - 2025 பொதுத் தேர்வு கள் மேல்நிலை இரண்டாம் ஆண்டிற்கு 03.03.2025 முதல் 25.03.2025 வரையும், மேல்நிலை முதலாம் ஆண் டிற்கு 05.03.2025 முதல் 27.03.2025 வரையும், பத் தாம் வகுப்பிற்கு 28.03.2025 முதல் 15.04.2025 வரையும் நடைபெறவுள்ளது.

பொதுத் தேர்வுகளை சிறப்பாக நடத்திட கண்கா ணிப்பு அலுவலர்கள் , ஆய்வு அலுவலர்கள் மற்றும் அரசுத்தேர்வுகள் உதவி இயக்குநர்களுக்கான மாநில அளவில் கூட்டம் 13.02.2025 அன்று நடத்தப் பட்டு அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது.

பொதுத் தேர்வுகளை கண்காணிப்பதற்காக கண் காணிப்பு அலுவலர்கள் தங் களுக்கு ஒதுக்கீடு செய்யப்ப ட்டுள்ள மாவட்டத்திற்கு சென்று தேர்விற்கு முந் தைய ஏற்பாடுகள் அனைத் தையும் பார்வையிட்டு உறுதி செய்துள்ளனர்.

மாவட்ட ஆட்சியர் தலைமையில் மாவட்டத் தேர்வுக்குழு அமைக்கப் பட்டு ஒருங்கிணைப்புக் கூட்டம் நடத்தி அக்கூட் டத்தில் தடையில்லா மின் சாரம் வழங்கிட மின்சாரத் துறைக்கும் தேர்வுப்பணிக ளுக்கு பாதுகாப்பு வழங் கிட காவல்துறைக்கும் தேர் வுமையங்களில் போதுமான அடிப்படை வசதிகள் செய்து தர உள்ளாட்சி அமைப்புகளுக்கு முன்னேற் பாடுகள் குறித்து அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

மேல்நிலை இரண்டாம் ஆண்டுப் பொதுத்தேர் வினை 8,21,057 தேர்வர்க ளும், மேல்நிலை முதலாம் ஆண்டுப் பொதுத்தேர் வினை 8,23,261 தேர்வர்க ளும் மற்றும் பத்தாம் வகுப்பு பொதுத்தேர்வினை 9,13,036 தேர்வர்களும் தேர் வெழுதவுள்ளனர்.

மேல்நிலை இரண்டா மாண்டிற்கு 3,316 தேர்வு மையங்களிலும் மேல்நிலை முதலாமாண்டிற்கு 3,316 தேர்வு மையங்களிலும் பத் தாம் வகுப்பிற்கு 4,113 தேர்வு மையங்களிலுமாக மொத்தம் 25,57,354 தேர் வர்கள் 2024-25-ஆம் ஆண்டிற்கான பொதுத் தேர்வினை எழுதவுள் ளனர்.

இத்தேர்வுப் பணி யில் ஒவ்வொரு தேர்வு நாளன்றும் சுமார் 45,000 க்கும் மேற் பட்ட ஆசிரியர்கள் ஈடு படுத்தப்படுவார்கள். மேலும் தேர்வு முறை கேடுகளை தடுக்க சுமார் 4800 க்கும் மேற் பட்ட பறக்கும் படை யினர் தேர்வுப்பணியில் ஈடுபடுத்தப்படு வார் கள்.

மேல்நிலை முதலா மாண்டு, இரண்டா மாண்டு மற்றும் பத் தாம் வகுப்பு பொதுத் தேர்வெழுதும் 20,476 மாற்றுத்திறனாளி தேர் வர்களுக்கு மொழிப் பாட விலக்கு, சொல் வதை எழுதுபவர், தேர்வெழுத கூடுதல் ஒரு மணி நேரம் போன்ற சலுகைகள் வழங்கப்பட்டுள்ளது.

மாணவர்கள்/தேர் வர்கள்/பொதுமக்கள் தங்களது புகார்கள், கருத்துக்கள் மற்றும் ஐயங்களை தெரிவித்து பயன்பெற வசதியாக அரசுத் தேர்வுகள் இயக் ககத்தில் முழுநேரத் தேர்வுக் கட்டுப்பாட்டு அறை அமைக்கப்பட் டுள்ளது. தேர்வு நாட் களில் ஒவ்வொரு நாளும் காலை 8.00 மணி முதல் இரவு 8.00 மணி வரை இக்கட்டுப் பாட்டு அறை செயல் படும் எனத் தெரிவிக் கப்படுகிறது.

தேர்வுக் கட்டுப் பாட்டு அறை - தொடர்பு எண்கள் 9498383075 / 9498383076

அலைபேசி தடை:-

தேர்வு மைய வளா கத்திற்குள் அலைபே சியை எடுத்து வருதல் முற்றிலும் தடை செய் யப்பட்டுள்ளது. அத்து டன் தேர்வு பணியில் ஈடுபடும் ஆசிரியர்கள் தேர்வறையில் தங்களு டன் அலைபே சியை வைத் திருப் பதற் கு தடை விதிக்கப்பட் டுள்ளது.

இவ்வறிவுரையை மீறி தேர்வர்களோ அல் லது ஆசிரியர்களோ அலைபேசி/இதர தக வல் தொடர்பு சாதனங் களை வைத்திருப்ப தாக கண்டறியப் பட்டால் கடுமையான நட வடிக்கை மேற்கொள்ளப் படும்.

ஒழுங்கீனச் செயல்பாடு கள்:-

தேர்வு நேரங்களில் தேர் வர்கள் ஒழுங்கீனச் செயல்க ளில் ஈடுபட்டால் குற்றங்க ளுக்குதக்கவாறு தண்டனை கள் வழங்கப்படும். மேலும் ஒழுங்கீனச் செயல்களுக்கு உடந்தையாகவோ / ஊக் கப்படுத்தவோ பள்ளி நிர் வாகம் முயலுமே யானால் பள்ளித் தேர்வு மையத் தினை இரத்து செய்தும், பள்ளி அங்கீகாரத்தினை இரத்து செய்திட பள்ளிக் கல்வி/தனியார் பள்ளிகள் இயக்குநருக்குப் பரிந்து ரை செய்தும் கடுமையான நட வடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தெரிவித்துள்ளார்.